DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC. 178/2022 |
| | |
| Deposition of Witness | { PW 1 |
| | { Prosecution |
| | { |
| Name | : ரத்தினவேல் |
| Father's Name | : த/பெ. பழனிவேல் |
| Taluk | : சங்ககிரி |
| Calling | :விவசாயம் |
| Religion | :இந்து |
| Age | :60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2023.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.1ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1 முதல் 3- ஆம் எதிர்கள் ஆஜர்

<u>**முதல் விசாரணை**</u>

நான் சங்ககிரி கிராமம் மேஸ்திரி காட்டில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 06.07.2020-ஆம் திங்கள்கிழமை காலை 11 மணிக்கு நான் என் வீட்டிற்கு வெளியில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் அங்கு வந்தார்கள். அப்போது 1-ஆம் எதிரி என்னை "தேவடியா பையனோ எனக்கு பாகம் பிரித்து கொடுக்காமல் நீ மட்டும் வீடு கட்டி இருக்கிறாய்" என்று பேசிக்கொண்டே என்னை கையால் முதுகில் அடித்தார். அப்போது 2-ஆம் எதிரி என்னை பின்னால் கையை சேர்த்து பிடித்துக்கொண்டார். அப்போது 3-ஆம் எதிரி மறைத்து வைத்திருந்த சூரி

கத்தியை எடுத்து எனது இடது பக்க தோள்பட்டையில் குத்தினார். பின்பு இடது பக்க வயிற்றில் குத்தினார். பின்பு வலது பக்க மார்புக்கு மேல் குத்தினார். அதனால் எனக்கு தோள்பட்டை, வயிறு, மார்பு ஆகிய இடங்களில் இரத்த காயமானது. அதனால் நான் சத்தம் போட்டேன். உடனே அருகிலிருந்த விவேகானந்தன், லோகநாதன் ஓடி வந்து எதிரிகளை விலக்கிவிட்டு என்னை சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்றார்கள். அப்போது என் மகன் தினேஷ் உடன் வந்தார். நான் சங்ககிரி அரசு மருத்துவமனையில் முதலுதவி பெற்றுக்கொண்டு பின்னர் ஈரோடு Emergency Hare தனியார் மருத்துவமனையில் 2 நாட்கள் உள்நோயாளியாக மேல் சிகிச்சை பெற்றேன். அப்போது கொரனோ நோய் பரவல் அதிகமாக இருந்தது. நான் சங்ககிரி அரசு மருத்துவமனையில் இருந்தபோது சங்ககிரி போலீசார் என்னை வந்து விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்து கொண்டார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ-1 ஆகும். என் புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் சூரி கத்தி தான் கத்தியால் தான் 3-ஆம் எதிரி என்னை "இத்தோடு செத்து ஒழிந்துபோடா" என்று சொல்லி குத்தினார். அந்த கத்தி சா.பொ. 1 ஆகும். 3 ஆம் எதிரி குத்தும்போது 2-ஆம் எதிரி "இவனை முடித்தால் தான்டா பிரச்சனை தீரும்" என்று கூறினார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

ஒம்/- ரத்தினவேல்

ஒம்/-திரு. ந. பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி